காலாண்டு தேர்வு செப்டம்பர் - 2017
வகுப்பு : 12
தமிழ் முதல் தாள்

Gr. Amina
Carmel GHSS
Manalikarai

I. எவையேனும் நான்கனுக்கு (2 மதிப்பெண்)

1. எட்டுத்தொகை நூல்கள் : நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, பதிற்றுப்பத்து, புறநானூறு, பரிபாடல்.

2. எளியவும் அரியவும் ஆவன :
* ஒரு செயலை "இவ்வாறு செய்து முடிப்போம்" என்று சொல்லுதல் எளியது.
* சொன்ன முறைப்படி செய்து முடிப்பது அரியது.

3. சிலப்பதிகாரம் - பெயர்க்காரணம் : * சிலம்பு + அதிகாரம்
* கண்ணகியின் கார்ச்சிலம்பு காரணமாய் வளர்ந்த கதை.

4. இராமன் குறிப்பால் உணர்ந்தவை : * இலங்கையினின்று திரும்பிய அனுமன் இராமனை வணங்காது தென் திசை நோக்கி வணங்குவதைக் கண்டான்.
* சீதை நலமுடன் இருக்கிறாள், அனுமன் சீதையைக்கண்டு வந்ததும் உண்மை. அவளுடைய கற்பு ஒழுக்கமும் நன்றாக உள்ளதும்.

5. தேம்பாவணி - பொருள் : தேம்பா + அணி ⇒ வாடாத மாலை
தேன் + பா + அணி ⇒ தேன் போன்ற பாக்களால் ஆன மாலை.

6. தமிழக அரசு பாரதிதாசனைப் போற்றியது
* திருச்சியில் பல்கலைக்கழகம் நிறுவியுள்ளது
* அவர்தம் கவிதை, உரைநடை, நூல்களை நாட்டுடைமையாக்கிச் சிறப்பித்துள்ளது.

II. எவையேனும் மூன்றனுக்கு மட்டும் (4 மதிப்பெண்)

7. தமிழன்னையை வாழ்த்துவம் :
i) முதன் முதலாய் நாவைப் பேசுவதற்கு அசைவித்த மொழி தமிழ்.
ii) அறியாமை இருளை போக்க அறிவாகிய கண்ணினைத் திறந்து உலக நடைமுறைகளைத் தெளிவாய்க் காட்டிய மொழி.
iii) அறிவுக் கண்களை நம் கருத்துகளோடு பொருந்தச் செய்த இனிய மொழி.
iv) தங்கள் சிந்தனைகளை மற்றவர்களுக்கு அறிவிப்பதற்கு கருவியாய் அமைந்த திருத்தமான மொழி.
v) உலகின் பிற மொழிகளைக் கற்பதற்கும் உதவி புரிந்த வண்மை பொருந்தியது தமிழ் மொழி. அதனால் தமிழன்னையே வாழ்க.

8. தூது வந்த பாணன் தெரிவித்த செய்தி:

1. வௌவால் தான் பகலில் தங்கியிருந்த மரத்தை தனித்திருக்க விட்டு, பழங்களை நாடி மாலை நேரத்தில் சென்று விடும்.
2. மணம் வீசிக் கொண்டிருக்கும் முல்லை நிலம் போல் மணமகளின் கூந்தல் உள்ளது.
3. அந்நேரத்தில் வண்டுக் கூட்டம் தம்மை விட்டு அகலாமல் மலர்கள் தூங்குக் கொண்டிருக்கும்.
4. அத்தகைய கார்காலம் வந்த பின்பும் தலைவன் திரும்பி வரவில்லை
5. அவர் வந்தாலும் வராது இருந்தாலும் அவருக்கு இன்பமாய் அமையும் போலும், அவர் வாழ்க! என்று சொல்லி கண்கள் சிவக்க அழுது கொண்டிருந்தாள் உடையவள் ஆனாள் தலைவி.

9. இடஞ்சுட்டி விளக்குக:

இடம்: குறுந்தொகையில் கபிலர் பாடிய குறிஞ்சித் திணையில் இடம் பெற்றுள்ளது.

கூற்று: தலைவி தோழியிடம் கூறியது.

பொருள்: களவில் மணந்த பொழுது குருகு மட்டுமே அங்கிருந்தது.

விளக்கம்: தலைவன் என்னை களவில் மணந்த போது சான்றாய் இருந்தது குருகு மட்டுமே. அது இரையாகிய ஆரல் மீனைத் தேடிக் கொண்டிருந்தது. ஆதலால் குருகு சாட்சி சொல்லப் பயன்படாது என்று தோழிக்குத் தலைவி சொல்வதாக அமைந்துள்ளது.

10. பராய்க்கடன் உரைத்தல்:

1. தலைவி தலைவனோடு உடன்போக்கினை மேற்கொண்டாள். அதனை அறிந்த நற்றாய் தன் மகள் கணவனோடு திரும்பிவர விரும்புகிறாள்.

ii) அவ்வாறு வந்தால் திருமணம் செய்து வைத்து கண்குளிர காண வேண்டும்.

iii) நன்னிமித்தமாய்க் காக்கையைக் கரையும் படி அதனிடம் இரந்து வேண்டுகிறாள். அவ்வாறு கரைந்தால் காக்கைக்கு பலிக்கடன் தருவதாகக் கூறுகிறாள்.

iv) நான் வேண்டியவை நிறைவேறுமானால் இன்னது படைப்பேன் என்று கடவுளையோ, பிறவற்றையோ வேண்டிக் கோடல் 'பராய்க்கடன் உரைத்தல்'

11. பொறையுடைமையின் சிறப்பு:

1. பூமி தன்னைத் தோண்டுபவரை விழாமல் தாங்கி கொள்வது போல நம்மை இகழ்பவரையும் பொறுத்து கொள்ளுதல்.

ii) பிறர் செய்த குற்றத்தை மறந்து விடுதல்

iii) விருந்தினர்களை விருந்தோம்ப இயலாமை என்பது வறுமையுள் வறுமை. அறிவற்றோர் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொள்ளுதல்.

iv) உயர்வுடைமை நீங்காமல் இருக்க வேண்டுமெனில் பொறுமையை போற்றி பாதுகாக்க வேண்டும்.

12. ஏதேனும் மூன்றுக்கு மட்டுமே (4 மதிப்பெண்).

12 ஊரவர் திகைத்துக் கூறியன:

1. எவராலும் நீக்க முடியாத இத்துன்பத்தினை செய்து என்றும் வளையாத செங்கோலானது வளைந்தது.
2. பாண்டியனது அரசு அழிவுற்றது.
3. வேந்தனது குளிர்ந்த குடையானது இன்று வெம்மையை விளைத்தது.
4. சிலம்பை கையின்கண் ஏந்திக்கொண்டு நம்மை கெடுக்கும் பொருட்டு இப்புதிய பெரிய தெய்வம் நம்மிடம் வந்தது ஏனோ?
5. இவள் தெய்வத்தன்மை உடையவள். இனி விளையக் கூடியது யாதோ.

13. என் பெற்ற தெய்வம்:

1. உம்முடைய பெருமைக்குரிய தேவி என்றும் உரிமைக்கும்,
2. உன் தந்தை தயரதனின் பெருமைக்குரிய மருமகள் என்றும் வாய்மைக்கும்
3. மிதிலை அரசன் சனகனின் பெருமைக்குரிய மகள் என்றும் மேன்மைக்கும் ஏற்றவளாக சீதாதேவி வாழ்கிறாள்.

14. ஆர்தாவிதன் எடுத்துச் சென்ற ஆயுதம்.

1. கோலியாத்தை எதிர்த்துப் போர் புரிய புறப்பட்டான் தாவீது
2. சவுல் மன்னன், வேலாயுதத்துடன் தன்னுடைய படைக்கலன்கள் பலவற்றையும் அவருக்கு சேர்த்தந்தான். "இவற்றை உபயோகிக்கும் முறை எனக்குத் தெரியாது" என்று கூறி தாவீது வாங்க மறுத்தான்.
3. ஐந்து கற்களோடு, கவணையும் எடுத்துக் கொண்டு போருக்குப் புறப்பட்டான்.

15. தாவீதன் கோலியாத்தை வென்றமை:

1. தாவீது கோலியாத்தைக் கடவுள் துணை கொண்டு விரைவில் வெல்வதாய்க் கூறி கவணைச் சுழற்றினான்.
2. கல்லை கவணில் வைத்ததையும் கவணைச் சுழற்றியதையும் கல்லை விரைவில் செலுத்தியதையும் எவரும் காணவில்லை. ஆனால் அக்கல் கோலியாத்தின் நெற்றியில் பாய்ந்ததை மக்கள் கண்டனர்.

16. பாண்டியன் பரிசு:

1. கதிரை நாட்டுரிமையைக் குறிக்கும் பட்டயம், 2. வீரவாள்
3. மணிமுடி 4. அணிகலன்கள்.

IV ஏதேனும் ஒன்றனுக்கு (8 மதிப்பெண்)

17. அறிவுடைமை:

1. அறிவு ஒருவனுக்கு அழிவு வராமல் முன் அறிந்து காக்கக் கூடிய கருவி ஆகும்.
2. மனத்தை தீய வழிகளிலிருந்து விலக்கி நல்வழியின்கண் செலுத்துவது சிறந்த அறிவு.
3. அரிய கருத்துகளை எடுத்துரைப்பதும், நுண்பொருளை ஆராய்ந்து தெளியும் ஆற்றலும் அறிவாகும்.
4. எந்தக் கருத்தினை எவர் கூறக் கேட்பினும் அவற்றுள் உண்மைப் பொருள் காண்பதே அறிவு.
5. சான்றோரின் எவ்வழியில் செல்கிறார்களோ அதே வழியில் தாமும் வாழ்தல்
6. சான்றோரின் நட்பில் நிலைத்து வாழ்வதே அறிவாகும்.
7. பிற்காலத்தில் நடக்கப் போவதை முன்கூட்டியே உணர்ந்து கொள்பவர் அறிவுடையார். அவ்வாறு உணர முடியாதவர்கள் அறிவிலார்.
8. பழி பாவங்களுக்கு அஞ்சாமல் வாழ்வது அறியாமை. அஞ்சி வாழ்தல் அறிவுடையோர் செயல்.

18. சீதையை அனுமன் கண்டு வந்து கூறிய செய்திகள்

1. அனுமன் இராமனிடம் தேவர்களுக்கெல்லாமல் தலைவனாக இருப்பவனே! சீதையின் கற்பினைப் பற்றிய ஐயத்தையும் துன்பத்தையும் கைவிடுவாயாக.
2. உன் மனைவி என்னும் உரிமையின் பெருமைக்கும் தசரதச் சக்கரவர்த்தியின் மருமகள் என்பதற்கும் ஏற்ற பண்புகளுடன் வாழ்கின்றாள்.
3. உயர்குடிப் பிறப்பு, பொறுமை, கற்பு ஆகியன ஒருங்கு கூடி களிப்போடு நடனமிடுவதைக் கண்டேன்.
4. கற்பகச் சோலையுள் உன் தம்பி, இலக்குவன் காட்டு புட்களால் தொடுத்த தூய்மையான பர்ண சாலையில் சீதாதேவி [illegible]

5. இலங்கை அசோகவனத்திலுள் தெய்வம் போன்ற சீதாதேவி கண்ணீர்க் கடலில் மிதக்கக் கண்டேன்.

19. மறப்பரிது தூய் நன்றி:

1. மனிதனின் உடல் உயிர் பிரிந்தால் மிகச் சிறிதளவு கூட பயன்படாது. சான்றோர்களின் ஞானத்திற்கு இலக்கானது.
2. மனித வாழ்வு நீர்க்குமிழி போலத் தோன்றி மறையும் இளமை கொண்டது. இவ்வுடலை நற்செயலைச் செய்யவே பயன்படுத்துதல் வேண்டும்.
3. தாய், தந்தையருக்கும், தமிழ்நாட்டிற்கும் என்னால் சிறு நன்மை கிடைக்குமானால் அதற்காக இறக்கும் நாளே எனக்குத் திருநாளாகும்.
4. பனையளவு பெரிய நன்மை கிடைக்குமானால் தன்னலத்திற்கே பயன்படுத்துபவன் பதர் போல் ஆவான்
5. என்னால் உனக்கு ஆக வேண்டிய செயல் ஏதேனும் இருந்தால், என் உயிரையும் தருவேன்.

20. அ. தலைவன்
ஆ. தேர்ப்பாகனிடம்
இ. மதுரை பள்ளனார்
ஈ. அகநானூறு.

21. அ. வேலன்
ஆ. ஆத்தா
இ. அன்னத்திடம்
ஈ. பாண்டியன் பரிசு.

22. "கண்டனென் .... பாவகை – கலிவிருத்தம்.

23. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.
எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்.

24.
அ. திற + த்(ந்) + த் + அ.
ஆ. கொள் + வ் + அர்
இ. காண் + ப் + அன்
ஈ. எய்து + இன் + அன்
உ. அறை + தல்
ஊ. முழங்கு + (இன்) + ய் + அ.

25) அ. அடுக்குத்தொடர்
ஆ. பண்புத்தொகை
இ. சொல்லிசை அளபெடை
ஈ. உரிச்சொற்றொடர்
உ. உவமைத்தொகை
ஊ. 6-ம் வேற்றுமைத் தொகை.

26. அ. முதுமை + மரம் (ஈறுபோதல்)

ஆ. நிறை + உடைமை (i) இ ஈ ஐ வழி யவ்வும்
ii) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே)

இ. பூ + கொடியாள் (i) பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும்)

ஈ. மணி + கருத்து (இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்.)

உ. வெம்மை + சுடர் (i) ~~ஈடு~~ ஈறுபோதல்
ii) முன்னின்ற மெய் திரிதல்)

ஊ. உயிர் + உணவு (உடல்மேல் உயிர்வந்தொன்றுவது இயல்பே).

27. பொருண்மொழிக் காஞ்சித் துறை:

முனிவராகிய மெய்யுணர்ந்தோர் கண்ட பொருள் இதுவென அதன் இயல்பை உணர்த்தியது.

சான்று: "நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்"

விளக்கம்: நல்லது செய்யவில்லை யென்றாலும் தீயன செய்வதைக் கைவிட வேண்டும்.

(or)

குறிஞ்சித் திணை: முதற்பொருள் நிலம்: மலையும் மலைசார்ந்த இடமும்

பொழுது: சிறுபொழுது - யாமம்
பெரும்பொழுது - கூதிர் முன்பனி

கருப்பொருள்
தெய்வம் - முருகன்
மக்கள் - குறவர், குறத்தியர்
பறவை - கிளி, மயில்
விலங்கு - புலி, கரடி, பன்றி
ஊர் - சிறுகுடி.

உரிப்பொருள்: புணர்தலும் புணர்தல் நிமித்தமும்.

சான்று: "யாருமில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ"

விளக்கம்: தலைவர் கருணை கொண்டு என்னைத் திருமணம் செய்து கொண்டாலன்றி எனக்கு உதவியாகச் சான்று கூறுவோர் வேறு ஒருவரும் இலர்" என்று தோழியிடம் தலைவி கூறியது.

28. எடுத்துக்காட்டு உவமை அணி:

உவமை, உவமேயம் வெளிப்படையாக அமைந்து உவம உருபு மறைந்து வருவது.

உவமை - இன்மையுள் இன்மை விருந்தொரால்
உவமேயம் - வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை
உவம உருபு - 'போல' மறைந்து வந்துள்ளது.

or.

தற்குறிப்பேற்ற அணி: இயற்கையாய் நிகழும் நிகழ்ச்சி மீது கவிஞர் தம் கற்பனைக் கருத்தை ஏற்றி கூறுதல்
"வாங்கிய ஆழி தன்னை வஞ்சர் ஊர் வந்த தாமென்
நாங்கையர் மழைக்கண் ணீரால் ஆயிரம் கலச மாட்டி.

or

உவமையணி: உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் ஒரு வாக்கியமாகவும் உவம உருபும் வெளிப்படையாய் அமைந்திருப்பது. (எ.கா) அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

29. சிலப்பதிகாரம்
30. சீவகச்சிந்தாமணி
31. குண்டலகேசி
32. மணிமேகலை
33. முருகன்
34. பதினொன்று
35. நெடுந்தொகை
36. நற்றிணை
37. பெருந்தேவனார்
38. 9
39. திருக்குறள்
40. காதை
41. சிலப்பதிகாரம்
42. ஒட்டக்கூத்தர்
43. படலம்
44. சதுரகராதி.
45. வீரமாமுனிவர்
46. பிசிராந்தையார் நாடகம்
47. குயில்
48. இரண்டாம் வேற்றுமைத் தொகை
49. வேதனை தொழில்
50. அரியவாம் வண்ணம்.

Sister Selestin